**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய பால் வளத் துறை அமைச்சர்கூட கோரிக்கை வைத்து, சென்ற மாதம் அது இயக்கப்பட்டது. அந்த நேரத்தில் அந்தப் புதிய பேருந்து இயக்கப்படுகின்ற நேரத்தில் அந்தச் சாலை சரி செய்யப்படாமல் இருந்தது. அதற்குப் பின்பு, அந்தச் சாலை சரி செய்யப்பட்டுவிட்டதாக இப்போதுதான் உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, சாலை முன்பே சரி செய்யப்படவில்லை. இப்போது சரி செய்யப்பட்டிருந்தால்—புதிய பேருந்துகளை இயக்கியதற்குப் பின்பு, ஓரிரு மாதங்களுக்குள்தான் அது சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும், உடனடியாக அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 13, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**13—**

### மின் கணக்கெடுப்பு

***50030—திரு. பி.கே. சேகர்பாபு:**

*மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மின் நுகர்வு கணக்கீட்டாளர்கள் குறிப்பிட்ட கால அளவிற்குள் கணக்கெடுப்பு செய்யாமல் தாமதமாகக் கணக்கெடுப்பதால் நுகர்வோருக்குக் கூடுதல் கட்டணம் விதிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.*

2006 ஜனவரி 17]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் நுகர்வோர் கணக்கீட்டாளர்கள் பணியிடம் முழுவதுமாக நிரப்பப்பட்டு உள்ளதா? அல்லது காலிப் பணியிடம் இருப்பின், புதிய நியமனம் செய்வதற்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தில் கணக்கீட்டுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மொத்தம் 5,745. இதில் 5,565 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 180 பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. இருந்தாலும், இந்த 180 பணியிடங்களும் இப்போது கருணை அடிப்படையில், பணியில் இருக்கும்போது இறந்த தொழிலாளர்களுடைய...

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** பணியில் இருக்கும்போது இறக்கும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு, வாரிசுகளுக்குப் பணிகள் வழங்குவதற்காக அந்தப் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு மின் வாரியத்தில் இந்தக் கணக்கீட்டுப் பணியினைக் கையாளுவதற்கு கணினிமயமாக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் இப்பொழுது அந்தப் பணிகளைக் கணினிமயமாக்குவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, இதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு—பணியிலே காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.